# ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ

ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು–560003.

# KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD

Malleshwaram, Bengaluru – 560003.

## 2021-22 ಸಾಲಿನ ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆ ಪತ್ರಿಕೆ – 1

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು** | **ವಿಷಯ ಸಂಕೇತ : 10-T**

**ಅವಧಿ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷ** | **ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100**

**ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿಗಳಿಗೆ**

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.

2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.

3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.

4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.

5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

**I.** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1 x 6 = 6**

1. குறளடி

   A. மூன்று சீர்கள்

   B. நான்கு சீர்கள்

   C. இரண்டு சீர்கள்

   D. ஐந்து சீர்கள்

2. அடிகள் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது -

   A. மோனை B. எதுகை

   C. முரண் D. இயைபு

3. தாமரை மலர்ந்தது

   A. காலவாகு பெயர் B. பொருளாகு பெயர்

   C. இடவாகு பெயர் D. சினையாகு பெயர்

4. பாம்பு! பாம்பு! பாம்பு :

   A. இரட்டை கிளவி B. வினைச்சொல்

   C. அடுக்குத் தொடர் D. உரிச்சொல்

5. செந்தமிழ் :

   A. செம்மை + தமிழ் B. செந் + தமிழ்

   C. செம் + தமிழ் D. செ + தமிழ்

6. ஓடி விழுந்தான் 'ஓடி' என்பது -

   A. வினைமுற்று B. வினையெச்சம்

   C. பெயரெச்சம் D. முற்றெச்சம்

**II.** **முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக.** **4 x 1 = 4**

7. தாயைப் போல பிள்ளை ; நூலைப் போல ……………

8. பால் வார்த்தாலும் விஷம் குறைக்காது பாம்பு ; நன்றியுடன் மொக்கை வாலாட்டும் : ……………

9. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல் வெட்சி திணை; பசுக்களை மீட்டல் ……………

10. மயில் அகவும் ; குயில் ……………

**III.** **ஒரு தொடரில் விடை தருக.** **7 x 1 = 7**

11. மாணிக்க வாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய் கூறுகிறார் ?

12. நல்லமுது என்று பாரதிதாசன் எதனை குறிக்கிறார் ?

13. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

14. சீதை அனுமனிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

15. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது ?

16. இன்றைய இனைஞன் எவற்றை இடறி விட வேண்டும்?

17. C.F.C. என்றால் என்ன ?

**IV.** **மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக.** **10 x 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

19. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது?

20. காளைகளுக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன?

21. திரு. வி. க. ஒரு வானம்பாடி என எவ்வாறு கூறலாம் ?

22. இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று கவிஞர் வைரமுத்து கூறுகிறார் ?

23. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை?

24. விடுகதை என்பதை விளக்குக.

25. இரட்டைக்கிளவியைச் சான்றுடன் விளக்குக.

26. அணி என்றால் என்ன? அது எத்தனை வகைப் படும் ?

27. யாப்பின் உறுப்புகள் யாவை ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக. 4 x 3 = 12**

28. வள்ளுவர் எவ்வெவற்றை அறம் என்று கூறுகிறார் ?

29. பாண்டியனால் மதுரை சொக்க நாதன் பிரம்படி பட்டது ஏன் ?

30. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

31. இளம் பெருவழுதியைப் பற்றிய இளங்குமரனின் கருத்து யாது ?

**VI. குறிப்பு வரைக. 2 x 3 = 6**

32. புறநானூறு

33. திருவள்ளுவர்

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3**

34. பிறிது மொழிதல் அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக. 3 x 3 = 9**

35. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.''

36. சந்திப்பது சாவா? அது களாவை விட இனிது !

37. தெருக்களில் பாண்டி விளையாடக் கூட ஒரு பெண் பிள்ளையைக் காணோம்.

**IX.** கீழ்வரும் பழமொழியை விளக்குக. **1 x 3 = 3**

38. ''புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது''.

அல்லது

''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''.

**X.** அடிபிறழாமல் எழுதுக. **1 x 4 = 4**

39. ''இனிமைத் தமிழ் மொழி'' - என வரும் பாடல்.

அல்லது

''பள்ளம் மேடுள்ள பாதையிலே'' - என வரும் பாடல்.

**XI.** எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக. **2 x 4 = 8**

40. சேதுப்பிள்ளையவர்கள் '' பெருந்தகையர் என்ற சொல்லைப் பயன்படுத்திய உரையாடலை விளக்குக :

41. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

அல்லது

நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம்?

**XII.** கீழ் வருவனவற்றை விளக்கி வரைக. **1 x 4 = 4**

42. இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமான் கூறியவற்றை எழுதுக :

அல்லது

பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்
ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்ப் போவோர்
சொன்ன சொல் கேட்பாரும் என் மக்களே
காற்றையே உண்பாரும் என் மக்களே.

**XIII.** பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக. **2 x 2 = 4**

திருக்குறள் சமயம், இனம், நாடு, மொழி கடந்து உலகப் பொது நூலாகத் திகழ்கிறது, மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பற்றியும் சிறப்புறக் கூறும் நூலாகும், அறவழியில் பொருளீட்டி அப்பொருளினால் நல்லின்பம் தூய்த்தலையே முழுமை பெற்ற வாழ்வு என்பர். இம்முழுமையைப் பழுதறப் பகரும் நூல்களுள் தலை சிறந்தது திருக்குறளாகும். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. குறள் வெண்பா, என்னும் யாப்பில் அமைந்தது.

வினாக்கள் :

43. (a) திருக்குறள் எவற்றை சிறப்புற கூறுகிறது ?

(b) எதனை முழுமை பெற்ற வாழ்வு என்கிறார் திருவள்ளுவர்?

**XIV.** மடல் எழுதுக. **1 x 5 = 5**

44. நீ வசிக்கும் பகுதியில் பெருமழைப் பொழிவினால் சிதைந்து கிடக்கும் சாலைகளை சீரமைத்து தருமாறு மாநகர ஆணையருக்கு மடல் எழுதுக.

அல்லது

உன் பள்ளியில் நடந்து முடிந்த ஆண்டு விழாவினைக் குறித்து உன் நண்பனுக்கு/தோழிக்கு மடல் எழுதுக :

**XV.** கொடுக்கப் பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. **1 x 5 = 5**

45. ''இயற்கையே நம் உயிர் நாடி''

அல்லது

''கல்வி கற்றலில் கை பேசியின் இணைய பயன்பாடு''